<u>பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்</u>

ந.க.எண். 13693 /குந/நி1/2019

குடும்ப நல இயக்ககம்,
359, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை,
சென்னை–600 006.
நாள்: 08.04.2021

பொருள் நிர்வாகம் – குடும்பநல திட்டம் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. இரதீஸ் கனகராஜன், ச/பெ (லேட்) திரு.சதீஷ் கனகராஜன், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன் முறை செய்து – ஆணை வெளியிடப்பட்டது – தொடர்பாக.

பார்வை 1)அரசுக்கு அனுப்பிய இவ்வலுவலக இதே நாளிட்ட கடித எண்.13693/குந/நி1/ 2019, நாள்: 12.11.2020.
2)அரசாணை (நிலை) எண். 57 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி2) துறை நாள் 15/03/2021.

*****

பார்வை 2 ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் ஆக பணி நியமனம் செய்யப்பட்ட திரு. இரதீஸ் கனகராஜன் என்பவரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் ஆகப் பணியில் இணைந்த 14/05/2018 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டது (அதன் அசல் இணைக்கப்பட்டுள்ளது). அரசு ஆணையும் மற்றும் தனியரின் 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அசல், பள்ளி மாற்றுசான்றிதழ் அசல் மற்றும் சாதி சான்றிதழ் (அசல்) ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை இவ்வியக்ககத்திற்கு உடன் அனுப்பிடுமாறு தேனி (இ) பெரியக்குளம் மாவட்ட துணை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவினை பதிவிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும், இவர் மூன்று வருட காலத்திற்குள் தொடர்ச்சியான இரண்டு ஆண்டு காலத்திற்கு தனது தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்டு, தகுதிகாண் பருவத்தினை அப்பருவ காலத்திற்குள் முடிக்க அறிவுறுத்தப்படுகிறார். மேலும், அத்தகுதிகாண் பருவத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதித் தொகுப்பு நூலில் தேர்ச்சி பெறவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்.

இணைப்பு – 1. அரசாணை அசல்
2. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (அசல்)
3. சாதி சான்றிதழ் (அசல் )
4. பள்ளி மாற்றுச் சான்றிதழ் (அசல்)

K.சலீமா பீ,
இணை இயக்குநர்,(நிர்வாகம்)(பொ)

பெறுநர்
துணை இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்பநலம்,
தேனி (இ) பெரியக்குளம்,
தேனி (இ) பெரியக்குளம் மாவட்டம்.

<u>நகல்</u>
இருப்பு கோப்பு / உபரி

/உண்மை நகல்/உத்தரவுபடி/அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்.

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி –கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு. வி. ரதிஷ்கனகராஜன், (ச/பெ. (லேட்) சதீஸ்கனகராஜன்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை

அரசாணை (நிலை) எண்: 57

நாள்: 15.03.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, பங்குனி– 02

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.
3. குடும்ப நல இயக்குநரின் கடித ந.க.எண்.13693/குந/நி1/2019, நாள். 12.11.2020.

******

ஆணை:-

மேலே மூன்றில் படிக்கப்பட்ட குடும்ப நல இயக்குநரின் கடிதத்தில், மதுரை மாவட்டம், செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பண்டக காப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, திரு. சதீஸ்கனகராஜன், என்பவர் 29.12.2000 அன்று பணியிடையே மரணமடைந்துவிட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 06.05.1978 என்றும் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.05.2036 என்றும், இறந்த அரசு ஊழியரின் சகோதரர் திரு. வி. ரதிஷ்கனகராஜன், என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 15.05.2001 நாளிட்ட கடிதத்தின் மூலம் விண்ணப்பித்துள்ளார் என்றும், இவரின் பிறந்த தேதி 06.05.1978 ஆகும் என்றும், அரசு ஊழியர் இறந்த நாளான 29.12.2000 அன்று தனியர் 22 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், திரு. வி. ரதிஷ்கனகராஜன், கருணையடிப்படையில் பணிநியமனம் பெற போதிய கல்வித் தகுதி பெற்றிருந்ததாலும், மூன்றாண்டு காலக்கெடுவுக்குள் விண்ணப்பம் சமர்ப்பித்திருந்ததாலும், குடும்பம் வறுமை சூழலில் உள்ளது என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்தில் எவரும் அரசு / தனியார் துறையில் பணியில் இல்லை என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்திற்கு அசையும் / அசையாச் சொத்துக்கள் ஏதுமில்லை என்று மதுரை (தெற்கு) வட்டாட்சியர் சான்றளித்திருந்ததாலும், மனுதாரர் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற ஆட்சேபம் இல்லை என அரசு ஊழியர் குடும்பத்தில் இதர நபர்கள் எழுத்து மூலமாக தெரிவித்திருந்ததாலும், மற்றும் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற இதர நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்ததாலும், மனுதாரர் திரு. வி. ரதிஷ்கனகராஜன், என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக குடும்ப நல இயக்குநரகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டு, அவர் 14.05.2018 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார் என தெரிவித்து, தனியர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 14.05.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுமாறு குடும்ப நல இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. குடும்ப நல இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, தனியர் திரு. வி. ரதிஷ்கனகராஜன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 14.05.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக, தமிழ்நாடு அமைச்சுப்பணிக்கான சிறப்பு விதிகளில், விதி 28–யும் (வயது) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2) (பணப்பலன்கள்) ஆகியவற்றை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58–ன்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்த்தி, திரு. வி. ரதிஷ்கனகராஜன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 14.05.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண். 3309/ G1/2021–1 நாள் 23.02.2021 மற்றும் அ.சா.எண். 6377/G2/2021–1, நாள் 03.03.2021–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

குடும்பநலஇயக்குநர்,சென்னை– 600 006.
திரு. வி. ரதிஷ்கனகராஜன், இளநிலை உதவியாளர் (உரியவழியாக)
மாநிலகணக்காயர், சென்னை–600 018.

நகல்

தொழிலாளர்மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை,சென்னை–600 009.
மக்கள்நல்வாழ்வுமற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்புகோப்பு / உதிரிநகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/3/2021

பிரிவு அலுவலர்

16/3/2021